**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.63/2022 |
| Prosecution Witness | : | **அ.சா.3** |
| Name | : | **விஜயா** |
| Father's/Husband Name: | : | ஜோசப் |
| Address : | : | 4/14 ராஜா கார்டன் மேட்டு இருங்கலூர், மண்ணச்சநல்லூர், திருச்சி |
| Age | : | 54/2022 |

<u>தேதி: 25 /08/2022</u>

**முதல் விசாரணை :** <u>சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.</u>

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் பெரம்பலூரில் துணைப்பதிவாளராக பால் வளத்துறையில் பணியாற்றி வருகிறேன். இந்த வழக்கின் போது இதே அலுவலகத்தில் முதுநிலை ஆய்வாளாராக பணியாற்றினேன். 2012-2013 மற்றும் 2013-2014 DRD நூத்தப்பூர் பால் உற்பத்தியாளர் பால் கூட்டுறவு சங்கத்தில் இந்த வழக்கின் போது அதாவது 2012-2013 மற்றும் 2013-2014 ம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கையில் கடுங்குறைகள் காணப்பட்டது. இது சம்பந்தமாக விசாரணை செய்ய துணை பதிவாளரால் பிரிவு 81 தமிழ் நாடு கூட்டுறவு சங்க சட்டத்தின் கீழ் என்னை விசாரணை அதிகாரியாக செயல்முறை ஆணை எண். ந.கா.எண்.668/2015/இ/ 16.12.2015 ன் மூலமாக என்னை நியமித்தார். என்னிடம் காண்பிக்கப்படும் இந்த அ.சா.2 செயல் முறை ஆணை மூலம் நான் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டேன். நான் 16.12.2015 அன்று

எனது விசாரணையை தொடங்கினேன். மேலும் இந்த வழக்கிற்கான ஆவணங்களை கையகபடுத்தி சட்டப்படி நான் இந்த கடுங்குறைகள் சம்பந்தமாக விசாரணை செய்ய ரவிச்சந்திரன், K.R. சுப்ரமணியன், வனராஜன் மற்றும் நடராஜன் ஆகியோருக்கு அழைப்பாணை அனுப்பினேன். அதன் அடிப்படையில் நான் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். ஆனாலும் விசாரணை எனக்கு 3 மாதத்திற்குள் முடிக்கவில்லை என்பதால் நான் துணை பதிவாளர் பால்வளம் என்பவரிடம் நான் கால நீட்டிப்பு கேட்டு 14.03.2016 அன்று நான் விண்ணப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.3 ன் ஆவணம் மூலமாகத்தான் கொடுத்தேன். பின்பு கால நீட்டிப்பை துணை பதிவாளர் எனக்கு செயல் முறை ஆணை எண்.668/2015/இ/15.03.2016 ன் மூலம் வழங்கினார். என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.3 மூலமாகத்தான் எனக்கு கால நீட்டிப்பு வழங்கினார். பின்பு நான் எதிரிகளை விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். மீண்டும் அந்த காலத்திற்குள் எனது விசாரணையை முடிக்கவில்லை என்பதால் 09.06.2016 அன்று மீண்டும் கால நீட்டிப்பு கூறி நான் விசாரணை செய்து பின்பு எனக்கு 13.06.2016 அன்று ந.கா.எண். 668/2015/இ /13.06.2016 ன் மூலமாக வழங்கினார். என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.4 மூலமாகத்தான் எனக்கு கால நீட்டிப்பு வழங்கினார். 14.09.2016 ல் நான் விசாரணையை முடித்து எனது விசாரணை அறிக்கையை தாக்கல் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் இந்த ஆவணம் தான் நான் தாக்கல் செய்த

பிரிவு 81 ன் கீழான விசாரணை அறிக்கை **(1 முதல் 4 எதிரிகளுக்கு இந்த ஆவணம் வழங்கப்படவில்லை என்ற எதிர் தரப்பு ஆட்சேபணையுடன் அ.சா.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** ( சாட்சி உடல் நிலை சரியில்லாத மாதிரி பெரு மூச்சு வாங்குவதால் விசாரணை சிறிது நேரம் ஒத்தி வைத்தும் சாட்சி சரியாகாததால் கூடுதல் முதல் விசாரணைக்கு ஒத்திவைப்பட்டது).

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

Sd/-
Judicial Magistrate No.I,
Perambalur.